உ

சிவமயம்

நகரத்தார் திருமண நிகழ்ச்சிகள்

1 பேசி முடித்துக் கொள்ளுதல்.

2 முகூர்த்தம் வைத்தல் அல்லது கழுத்துருவுக்கு பொன் கொடுத்தல்.

3 முகூர்த்தக் கால் ஊன்றுதல் (வடகிழக்கு மூலை- ஈசான்ய மூலை)

4 கல்யாணம் சொல்லுதல்
முதலில் அப்பத்தாள் வீடு
மாப்பிள்ளை கல்யாணமாய் இருந்தால் சடங்கு செய்பவர்களுக்குச் சொல்ல வேணும்
அடுத்து ஆயாள் வீடு

5 கோவிலில் பாக்கு வைத்தல் (கல்யாணத்திற்கு மூன்று நாள் முன்பாகப் போய் பாக்கு வைக்க வேண்டும்) உதாரணமாக 21 ஆம் தேதி கல்யாணத்திற்கு 18 ஆம் தேதியன்று பாக்கு வைக்க வேண்டும். மணமகன். மணமகள் இருவரின் கோவில் பிரிவு மற்றும் மணமக்கள் பெயர், தகப்பனார் பெயர், அய்யா (தகப்பனாரின் தகப்பனார்) பெயர் மற்றும் விலாசங்கள், திருமண நேரம் ஆகியவற்றைக் குறித்து கொண்டு போகவேண்டும்.

கல்யாணத்திற்கு முதல் நாள்

6 கூடி ஆக்கி உண்ணுதல்

7 பெண்வீட்டில் கழுத்துரு வாங்குதல்
கழுத்துரு வாங்குதற்கு வள்ளுவப் பையும், அதில் வெற்றிலை. பாக்கு, விரலி மஞ்சள், புஷ்பமும், வைக்க வேண்டும்.

8 தும்பு பிடித்தல்

9 மணை போடுதல்

10 மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவித்தல்

11 அரசாணிக்கால் கட்டுதல்

12 மாற்றுக் கட்டுதல்

13 சீர் வைத்தல் (உள்ளூராக இருந்தால்)

14 கோவில் மாலை வாங்குதல் விளக்கு ஏற்றி, சங்கு ஊதி மாலையை வாங்க வேண்டும்.

திருமணத்தன்று

15 மாப்பிள்ளை கன்னி நீராடுதல்

16 பெண்ணுக்கு பூரம் கழித்தல்

17 பகவணம் செய்தல் காப்புக் கட்டுதல்: இரு வீட்டாரும் ஒரே ஊராய் இருந்தால் இரண்டு வீட்டிலும் செய்ய வேண்டும்.

18 மாப்பிள்ளைக்கு பகவணம் செய்யும்போது பெண் வீட்டுக்காரர் தலைச்சீலையில் பணம் முடிய வேண்டியது.

19 வெளியூர் கல்யாணங்களில் மாப்பிள்ளைவீட்டார் வந்தவுடன் கோவிலிலிருந்து மாப்பிள்ளை அழைத்து வந்து பகவணம் செய்ய வேணும்.

20 திருமாங்கல்ய பூசை செய்து, திருமாங்கல்யத்தை பெண் வீட்டு மாமக்காரர் எல்லாரிடமும் காண்பித்து ஆசீர்வாதம் வாங்க வேணும். பிறகு திருப்பூட்ட வேணும்.

21 திருப்பூட்டியபிறகு பெண்ணும், மாப்பிள்ளையும், மாமக்காரர்களுடன் கூட வந்து எல்லாரிடமும் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள வேண்டியது.

22 இசை குடி மானம் எழுதுதல்.

23 மணவறைச் சடங்கு: விநாயகர் பூசை, வர்ணகும்ப பூசை பின்னர் அக்னி வளர்த்து நவக்கிரக ஹோமம், ஆயுஷ் ஹோமம், பூமணம் இடுதல் முதலில் மாமக்காரர் அரிமணம் இடுதல்.
நெற்கோட்டையை தாண்டுதல், மாப்பிள்ளைக்கு சாப்பாடு போடுதல்.

24 கல்யாண வேவு, மாம வேவு எடுத்தல்.

25 கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல்.

26 பணம் எழுதுதல்.

27 மஞ்சள் நீராடுதல்.

28 காப்புக் கழட்டி கால் மோதிரம் இடுதல்.

29 நாணாலைச் சடங்கு (வெள்ளி கால் மிஞ்சி கொண்டு போக வேணும்)

30 பிள்ளையெடுக்கிக் கொடுப்பது.

31 பெண் சொல்லிக் கொள்ளுதல்.

32 அரசாணிக் கால் அவிழ்த்தல்.

33 பெண் அழைப்பு (வெளியூராக இருந்தால் கட்டுச் சோறு கொண்டு போதல்)

34 மாப்பிள்ளை வீட்டில் பொங்கல் வைப்பது.

35 மாப்பிள்ளை வீட்டில் பெண் அழைத்து சடங்கு செய்தல்.

36 மாப்பிள்ளை, பெண் குடத்திலிருந்து (தவலை) குலம் வாழும் பிள்ளை எடுத்தல்.

37 மாப்பிள்ளை பெண் பால் பழம் சாப்பிடச் செல்லுதல்.

38 மாப்பிள்ளை வீட்டார் பெண்ணிற்கு பால், நெல், பொதி வேவு எடுத்தல்.

39 பெண் வீட்டார் பொங்கல் வேவு இறக்குதல்.

40 பெண் வீட்டார் சொல்லிக் கொள்ளுதல்.

திருமணத்திற்கு முன்கூட்டியே

தயாரித்து வைக்கவேண்டிய சாமான்கள்

1 விரலி மஞ்சள்
2 நிலை விளக்கு
3 சர விளக்கு
4 அரசாணி மேடை
5 அரசாணி அடுப்பு
6 அரசாணிக்கால் கட்ட
முங்கில் கழி
பாலைக்குச்சி
கிளுவை மரக்குச்சி
7 பவளம் வெள்ளிக்காசு, 1
8 மாவிலை
9 அரச இலை
10 முளைப்பாலிகை
கிண்ணங்கள் 5
11 சிலேட்டு விளக்கு
12 பெரிய தாம்பாளம்
13 முக்காலி 2
14 சருவச் சட்டி 2
15 செம்பு
16 கெண்டிச் செம்பு
17 சடங்குத்தட்டு
[7கிண்ணங்களுடன்]
18 படி
19 குழவி பட்டுடன்
20 கத்தரிக்காய்
21 நவதானியம்
22 குலம் வாழும் பிள்ளை
23 தவலைகள்
24 வள்ளுவப் பை
25 எழுத்தாணி
26 பாக்குச் சுருள்
27 ஒலைக் கடகம்
28 வேவுக் கடகம்,
கத்தரிக்காய்
29 ஏட்டு ஒலை
30 பச்சரிசி
31 10 நிர் நூல்கண்டு
32 மாமப்பட்டு
33 சங்கு
34 ஆரத்தித் தாம்பாளம்
35 விபூதித் தாம்பாளம்
36 இசை குடி மானம்
37 மொய்ப்பண ஏடு
38 தடுக்கு
39 மணவரை விரிப்பு
40 குதிரை விரிப்பு
41 பால் செம்பு
42 பால் வேவுக்கு
நெல் கடகம்

பூரம் கழிக்க வேண்டிய சாமான்கள்

அரைத்த மஞ்சள்	தேங்காய்-3
சந்தனம், புஷ்பம்.	பழம்-6
நெல்படி-1	வெத்திலை பாக்கு
அரிசிபடி-1	பால்,
உப்புபடி-1	செம்பு, முக்காலி
இலை அடுக்கு-1	சருவச்சட்டி, சத்தகம்
கத்திரிக்காய்-5	மாவிலை, வேப்பிலை

அரசாணிக்கு முன்னால் கோலம் போட்டு வைக்க வேண்டியது. பெண்ணுக்கு அம்மாமிண்டி பூரம் கழிக்க இருக்க வேண்டும்.

மாப்பிள்ளை வீடு காப்பு கட்டுச் சாமான்

அரைத்த மஞ்சள்	பால் உழக்கு-இ
முனைமுறியாத மஞ்சள்	நெய் உழக்கு-இ
நூல்கண்டு	மணல்
கரைத்துணி	உமி
மாமப் பணம்	சமித்து
தேங்காய் 3	சூடன்
வாழைப்பழம்-10	முக்காலி-2
இலை அடுக்கு-1	சருவச்சட்டி-2
வெத்திலை பாக்கு	தாம்பாளம்-2
சந்தனம்	பாலிகை கிண்ணம்-5
கதம்ப புஷ்பம்	முளைதிரவியம்
மாங்கொப்பு	சிகப்பு பட்டு-1
நெல்படி-1	செம்பில் தண்ணீர்
பச்சரிசி படி-1	திருமாங்கல்யம் கோர்த்து வைக்கவும்

அரிமணம், பூமணம் இட பெண்வீட்டிற்கு முன் கூட்டியே சொல்லி விட தேண்டும்.

பெண்வீடு காப்பு கட்டுச் சாமான்

அரைத்த மஞ்சள்	பால் உழக்கு-இ
முனைமுறியாத மஞ்சள்	நெய் உழக்கு-இ
நூல்கண்டு	மணல்
கரைத்துணி	உமி
மாமப்பணம்	சமித்து
தேங்காய்–3	சூடன்
வாழைப்பழம்-10	முக்காலி-2
இலை அடுக்கு	சருவச்சட்டி-2
வெத்திலை பாக்கு	தாம்பாளம்–2
சந்தனம்	பாலிகை கிண்ணம்-5
கதம்ப புஷ்பம்	மாங்கொப்பு
நெல் படி–1	சிகப்பு பட்டு-1
பச்சரிசி படி-1	செம்பில் தண்ணீர்

பூமணம் இட மாப்பிள்ளை வீட்டுக்கு முன்கூட்டியே சொல்லிவிட வேண்டும்.

மணவரைச் சாமான்
(பெண் வீட்டில்)

அரைத்த மஞ்சள்	நெய் உழக்கு-இ
தேங்காய்-3	சூடன்
வாழைப்பழம்-10	முளைதிரவியம்
இலைஅடுக்கு-1	கிண்ணத்தில்
வெத்திலை பாக்கு	நல்லெண்ணை
சந்தணம்	கொண்டமாலை-2
கதம்ப புஷ்பம்	சடங்குச் சாமான்
நெல் படி-1	மாப்பிள்ளைக்கு சாப்பாடு
பச்சரிசி படி-1	சிகப்பு பட்டு-1
பால் உழக்கு–இ	செம்பில் தண்ணீர்

பூமணம் இடுதல்

பகவணம் செய்யும்பொழுது மலர்களை பசும் பாலில் நனைத்து மணமக்கள் உடலில் மணிக்கட்டு முழங்கை, தோள்பட்டை ஆகிய மூன்று இடங்களிலும் தொட்டு வாழ்த்துதல்-இப்படி 3 முறை செய்யவேண்டும். முதலில் மாமக்காரர்தான் செய்ய வேண்டும். அதே போல் மாமக்காரர்தான் முடித்து வைக்க வேண்டும். மணவரையிலும் பூமணம் இட வேண்டும்.

அரிமணம் இடுதல்

மணவரையின் போது முளைப்பாலிகை கிண்ணங்கள் ஐந்திலிருந்து முளைவிட்ட தானியங்களை எடுத்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்து போட்டு வாழ்த்துதல்.

திருப்பூட்டுதல்

மணமேடையில் மணமகள் கிழக்கு முகமாக நிற்க வேண்டும். மணமகன் கீழே தடுக்கில் மணமகளுக்கு எதிரே நிற்கவேண்டும். மணமகள் கையில் தேங்காய் வெற்றிலை பாக்கு மஞ்சள் பச்சரிசி ஆகியவற்றை கொடுக்கவேண்டும். மணமகள் இரண்டு கையாலும் அவற்றை தேங்காய் மணமகனை நோக்கி இருக்கிறாற்போல், வைத்துக் கொள்ள வேண்டும். முதலில் மணமகன் கோவில் திருநீற்றை, தான் பூசிக் கொண்டு பின்னர் மணமகளுக்கும் பூச வேண்டும். பிறகு கோவில் மாலையை எடுத்து மணமகளுக்கு அணிவிக்க வேண்டும். பின்னர் கழுத்துருவை நிதான

மாக எடுத்து மேல் பாகத்தில் திருமாங்கல்யம் உள்ள பகுதி வருமாறு மணமகளுக்கு அணிவித்து, பின்புறம் 3முடிச்சு போடவேண்டும், முதல் 2 முடிச்சுகளை மாப்பிள்ளையும் அடுத்த முடிச்சை நாத்தனாரும் போடுவது வழக்கம். பிறகு தாலிகளை அணிவிக்க வேண்டும். அதன் பின் கழுத்துரு திருமாங் கல்யத்திலும், 3 முடிச்சுகளிலும் சிறுதாலியிலும் கோவில் விபூதி, சந்தனம், குங்குமம் ஆகியவற்றை ஒவ்வொன்றாக வைக்கவேண்டும், பின்னர் மணமகள் கையில் உள்ள தேங்காய் வெற்றிலை வகையருவை தாம்பாளத்தில் வைக்கச் சொல்லி விட்டு மூன்று முறை மாலை மாற்றிக் கொள்ள வேண்டும், முதலில் மணமகன் தான் மாலையிட வேண்டும். பிறகு பெரியவர்களிடம் ஆசீர்வாதம் பெற வேண்டும்.

சடங்குத் தட்டு

7 கிண்ணங்கள் கொண்டது அவற்றில் 1) பிள்ளையார்வெற்றிலை பாக்கு 2) மஞ்சள் 3) விபூதி 4) பச்சரிசி 5) உப்பு 6) புளி 7) பஞ்சு ஆகியவற்றை வைக்க வேண்டும்.

முளைப்பாளிகை

இதை மூன்று நாட்களுக்கு முன்பே செய்ய வேண்டும். மணமகன் வீட்டில் முளைக்கும் திறனுள்ள நெல்படி 12 உழுந்து, துவரை, பாசிப்பயிறு, மொச்சை, பருத்தி, கேப்பை ஆகிய தானியங்களை தலா ஒரு உழக்கு வீதம் ஒரு தவலையில் போட்டு ஊரணித் தண்ணீர் ஊற்றிவைக்கவேண்டும் பிறகு அந்த தண்ணீரை வடித்து விட்டு வேறு தண்ணீர்

ஊற்றி வைக்க வேண்டும். திருமணத்திற்கு முதல் நாள் ஒருபாத்திரத்தில் சிகப்புத் துணியை வைத்து அதில் இந்தக் தானியங்களை வைத்து இறுகக்கட்டி வைக்க வேண்டும் இப்படிச் செய்யும் பொழுது அவை முளைவிட்டிருக்கும் அதில் ஒரு பகுதியை மணமகள் வீட்டுக்கு கொடுத்து விட வேண்டும் முதல் நாள் கழுத்துரு வாங்கி வருகையில் திருமணத்தம்பதிகளும் அவர்கள் குடும்பத்தாரும் முளைவிட்டு பல்கிப் 'பெருகி வாழவேண்டுமென்பதே இதன் நோக்கம் உப்புக்கடகம் ஏட்டோலை முதலியவற்றுடன் முளைதிரவியத் தையும் கொண்டுபோக வேண்டும்.

கோட்டைக் கட்டுதல்

ஒரு மரக்கால் நெல்லை உள்ளே வைத்து வைக்கோல் பிரியால் பந்துபோல் கட்டுதல் இதை திருப்பூட்ட போகையில் மணமகள் வீட்டுக்கு எடுத்து போக வேண்டும். அதை சாமி வீட்டில் நடுவில் வைப்பார்கள். மணமகன் அரசாணிக்கால், அக்னி ஆகியவற்றை வலம் வந்த உடன் இந்தக் கோட்டை யைத்தாண்டி சாமி வீட்டுக்குள் செல்லவேண்டும்.


கழுத்துரு கோர்த்தல்

கழுத்துரு நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு மட்டுமே உரிய மங்கல அணிகலன்களில் முக்கியமானதாகும். திருமணத்திற்கு முதல் நாள் கழுத்துரு வாங்கப்போவது ஒரு சடங்காகும். அப்பொழுது கழுத்துருவை வாங்கி வந்து பெரியவர்கள் இருந்து சரடுபின்னி கோர்பது வழக்கம்.

கழுத்துரு என்பது கழுத்தில் அணியும் பல உருக்கள் கொண்ட அணிகலனாகும். இது கோர்பதற்கு 10 நிர் வெள்ளை நூல் கண்டு வாங்க வேண்டும். இரு பெரியவர்கள் அந்த நூலில் 21பாகம் எடுத்து அதை மூன்றாக மடித்து ஒரு மடிப்புக்குள் இன்னொரு மடிப்பை 'அதை மூன்ருக மடித்து ஒரு மடிப்பிற்குள் இன்னொரு மடிப்பை பின்னளாகக் கொடுத்து வாங்கி, சங்கிலிப் பின்னல் போல பின்னி நன்ருக இறுக்கமாகத்திரித்துக் கொண்டு பட்டணம் மஞ்சளை நீரில் நனைத்துக் கொண்டு அந்த நூலில் நன்ருக தேய்த்து மஞ்சள் நன்ருக ஏறும்படி செய்து முறுக்கு விடாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள-வேண்டும் அப்படிக் கிடைப்பது 7பாகமாக இருக்கும் அதை இரண்டாக மடித்துக் கழுத்துருவில் 31 உருப்படிகளையும் கோர்க்க வேண்டும்.

மேல் பாகம் கீழ்பாகம் இரண்டிலும் கோர்த்த பின் இரண்டையும் இருமுனைகளிலும் தனித்தனியே உருவி வராத நிலையில் நன்றாக முடிச்சு போட வேண்டும்

கழுத்துரு



1, 16, 17, 31	கடைமணி
2, 3, 4, 6, 8, 10, 12, 14, 15, 18, 19, 20, 22, 23, 25, 26, 28, 29, 30	உரு
5, 13, 21, 27	ஏத்தளம்
7, 11	சரிமணி
24	லட்சுமி ஏத்தளம்
9	திருமாங்கல்யம்

கழுத்துரு உருப்படிகள்

மேல் பாகம் : 1, 2, 3, 4, 5, 6, 7, 8
9, 10, 11. 12, 13, 14, 15, 16

கீழ் பாகம் : 17, 18, 19, 20, 21, 22, 23, 24
25, 26, 27, 28, 29, 30, 31

1, 16, 17, 31,	—கடைமணி
2, 3, 4, 6, 8	
10, 12, 14, 15, 18,	உரு
19, 20, 22, 23, 25,	
26, 28, 29, 30,	
5, 13, 21, 27,	ஏத்தனம்
24	லெட்சுமி ஏத்தனம்
7, 11	சரி மணி
9,	திருமாங்கல்யம்

பிள்ளைச் சரடு இழைதல் :

இதைப்போல 7 பாகம் நூல் எடுத்து 3ல் ஒரு பங்காக சங்கிலிப்பின்னல் பின்னி மஞ்சள் ஏற்றி, அதில் ஒத்தை தும்பை கோர்க்க வேண்டும்.

ஒரு நல்ல நாள் பார்த்து கழுத்துருவின் இடது பக்கத்தில் இரண்டு கயிற்றிலும் சேர்த்து குச்சி, தும்பு துவாளையைக்கட்டி பின்னர் கழுத்துருவை கழுத்தில் அணிந்து கொண்டு சாமிகும்பிட்ட பின்னர் கழட்டி வைக்க வேண்டும்.

ஸ்ரீதன உண்டியல் மாதிரி

உ

ஸ்ரீ கிருஷ்ணஸகாயம்

வருடம் மாதம் உக்கு 19

குமாரர்

ஷியார் மனைவி

ஆக இருபேர்கள் வரவு

குமாரர்

பற்று

நாளது தேதியில் தங்கள் திருமணத்தின் போது

ஸ்ரீதனமாகக் கொடுத்தது ரூ.

தலைச்சீலையில் முடிந்தது ரூ.

பாக்குச்சுருளில் வைத்தது ரூ.

ஈடுபொன் வாங்கியது ரூ.

ஆக ரூ. இந்த ரூபாய்

வருடம் ஒன்றுக்கு ரூ. 100 க்கு

வட்டி ரூபாய் வீதம்

தருவதாக ஒப்புக்கொண்டு வரவு வைத்துக் கொண்டேன்.

25 காசு ரெவி. ஸ்டாம்ப்

குறிப்பு :- ஈடு பொன்துகை மாப்பிள்ளை வீட்டார் கொடுத்து ஸ்ரீ தனத்துடன் அதை சேர்த்துக் கொள்ளவேண்டும்.

ஸ்ரீதன உண்டியல் (பின்பக்கம்)

செல் எழுதவேண்டிய மாதிரி

உ

வருடம் மாதம் உக்கு 19

இந்த உண்டியலில் கண்டபடி ரூ. (ரூபாய்) நாளது தேதியில் ரொக்கமாகப் பெற்றுக்கொண்டோம்.

மாப்பிள்ளை கையெழுத்து

பெண் கையெழுத்து

(பெண் பெயருக்கு முன்னால் இன்ஷியல் புதிதாக உள்ளதை போடவேண்டும்.)

மாமக்காரர் தாலி மாலை முதலியவைகளை பெரியவர்களிடம் ஆசி பெறும்போது புரோகிதர் கீழ்கண்ட மந்திரத்தை சொல்வார்

வடமொழியில் : ''மாங்கல்யம் தந்து நாநேன
மம ஜீவன ஹேதுகு
கண்டே பத்நாமி சுபகே
சஞ்சீவ சரத ஸதம்''

தமிழில் : ''இது புனிதமான கயிறு. நான்
நல்லவிதமாக வாழ்ந்திருக்க வலிமை
பெற்றது. இதை நான் உன் கழுத்தில்
அணிவிக்கின்றேன். நீ சகல செல்வாக்கும்
படைத்தவளாய் நூறு ஆண்டுகள் சுகபோகங்களுடன்
வாழ்ந்திருப்பாயாக''

இசை பிடிமானம் விபரம் :

1-வது வகுப்பு 1-வது பிரிவுகாரர்களுக்கு
ஷ மீ உ

கல்வாசநாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையான் அருணாசலஞ் செட்டி ராமநாதரோ, கேரளசிங்கவள நாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் அரும்பாக்கூருடையான் கண்ணப்ப செட்டி நாராயணரோ அவர் மகன் சுப்பிரமணியனுக்கு இவர் மகள் வள்ளியம்மையை பாணிக்கிரஹணம் பண்ணிக்கொண்டமைக்கு இவர் பூஷணம் பூட்டும் பொன் ஒன்பது ஆறு கல்லெடை பொன்

பதிமுக்கழஞ்சு, இவர் சீதனங் கொடுக்கும், பொன் இம்மாறு இவவெடை பொன் ஆறு கழஞ்சு, வெள்ளி ஆறு கழஞ்சு வெண்கலம் தராப்பலம் அறுபத்தொன்று வெள்ளாட்டிற்குப் பணம் முப்பதும், சிராட்டுச் சக்கரம் அறுபத்தொன்று இவ்வகைப்படி செய்வோம். இவர் நன்கொடை கொடுக்கும் பொன் ஐம்பது மோதிரம் விராகனிடை மூன்று இவர் உகந்துடைமையாகக் கொடுக்கும் பொன் வளையல் ஏழு கழஞ்சு இவ்வகைப்படி செய்வோம். இந்த நாள் இவரிடம் பொன் இவர் சொற்படி தெரிசனை பதின்முக்கழஞ்சு இவ்வகைப்படி செய்வோம். இந்த இசைகுடிமானம் எழுதினேன். கல்வாசநாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையான்.

கையெழுத்து

மாப்பிள்ளை வீட்டுக்காரர் கையெழுத்து

பெண் வீட்டுக்காரர் கையெழுத்து

இதே மாதிரியாகவும் அவரவர்கள் வழக்கப்படிக்கும் தங்கள் தங்கள் ஊர் பிரிவுகளையும் பெயர்களையும் அந்தந்த இடத்தில் எழுதுவார்களாக.

1 இளையாற்றங்குடி கோவில்

இதன் உட்பிரிவுகள்: கல்வாச நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில்

1. ஒக்கூருடையான், 2. அரும்பாக்கிளையரான பட்டணசாமியார், 3. பெருமருதூருடையார்,

4. கழனிவாசக்குடியார், 5. கிங்கினிக்கூருடையார், 6. பேரசெந்தூருடையார், 7. சிறுச்சேத்தூருடையார்

ஆக வகை 7

சுவாமி: கைலாசநாதர்—நித்தியகல்யாணி

2 மாற்றூர்க் கோவில்

இதன் உட்பிரிவுகள்: கேரளசிங்கவள நாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்
1. உரையூருடையார் 2. அரும்பாக்கூருடையார்
3. மணலூருடையார் 4 மண்ணூருடையார்
5. கண்ணூருடையார் 6. கருப்பூருடையார்
7. குளத்தூருடையார்.

ஆக வகை 7

சுவாமி: ஐந்நூற்றீசர்—அம்மை: பெரியநாயகி

3 வயிரவன் கோவில்

இதன் உட்பிரிவுகள்: கேரளசிங்கவள நாடாகிய ஏழகப்பெருந்திருவான வீரபாண்டியபுரத்தில்

1. சிறுகுளத்தூருடையார்
2. கழனிவாசலுடையார்
3. மருதேந்திரபுரமுடையார்.

ஆக வகை 3

இதில் 1-வது சிறுகுளத்தூருடையார் வகுப்பில் மூன்று பிரிவுகள்—அதாவது:

1. பெரிய வகுப்பு 2. தெய்யனார் வகுப்பு (தெய்வநாயகர் வகுப்பு) 3. பிள்ளையார் வகுப்பு

சுவாமி: வளரொளிநாதர்—அம்மை: வடிவுடையம்மை

4 இரணியூர்க் கோவில்

கல்வாச நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராஜநாராயணபுரத்தில்

1. இரணியூர் திருவேட்பூருடையார்

சுவாமி: ஆட்கொண்ட நாதர்—அம்மை: சிவபுரந்தேவீ

5 பிள்ளையார்பட்டிக் கோவில்

கல்வாச நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராஜநாராயணபுரத்தில்

1. பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்

சுவாமி: திருவீசர்—அம்மை: சிவகாமவல்லி

சுவாமி: மருதீசர்—அம்மை; வாடாமலர்மங்கை

6 நேமங் கோவில்

கேரளசிங்கவள நாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில் தேனாறுபாயும்

2. இளநலமுடையார்

சுவாமி: செயங்கொண்ட சோளீசர்—அம்மை:சௌந்தரநாயகி

7 இலுப்பைக்குடிக் கோவில்

கேரளசிங்கவள நாடாகிய பிரம்பூர் நாட்டில் இலுப்பைக்குடியான புகழிடங்கொடுத்த பட்டினத்தில்

1. சூடாமணிபுரமுடையார்

சுவாமி: தான்தோன்றியீசர்—அம்மை:சௌந்தரநாயகி

8 சூரைக்குடிக்கோவில்

கேரளசிங்கவள நாட்டில் சூரைக்குடியான தேசிகநாராயணபுரத்தில்

1. புகழ் வேண்டி பார்க்கமுடையார்

சுவாமி : தேசிகநாதர்— அம்மை : ஆவுடையநாயகி

9 வேலங்குடிக்கோவில்

கேரளசிங்கவள நாடாகிய பாளையூர் நாட்டில் வேலங்குடியான தேசிகநாராயணபுரத்தில்

1. கழனிநல்லூருடையார்

சுவாமி : சண்டீசுவரர்—அம்மை : காமாட்சிஅம்மை

ஆக நகரத்தார்கள் கோவில் 9.

சக்தியொரு பாதியாய் சிவனுமொரு பாதியாய்
தர்மத்தில் இணைந்து வாழ்வோம்
சக்திவழி நேர்மையாய் பண்புவழி மேண்மையாய்ப்
பாரெலாம் வணங்க வாழ்வோம்!
பள்ளியறை கொள்வதில் பரமனடி சேர்வதில்
பக்கத்தில் பங்கு கொள்வோம்!
பாதாதி கேசமும் சீரான நாயகன்
பளிச்சென்று துணைவி வாழ்க!
படுவதொரு துயரேனும் வருவதொரு சுகமேனும்
பாதியாய்த் துணைவன் வாழ்க!
தாய்வீடு விட்டபின் தன்வீடு தாய்வீடு
என்றெண்ணியே தலைவி வாழ்க!
சமகால யோகமிது வெகுகால யாகமென
சம்சாரம் இனிது வாழ்க"

– கண்ணதாசன்



திருமகள் அச்சகம்
43, மகர்நோன்பு அக்ரஹாரம்
காரைக்குடி–1